DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.19/2022**

**2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 09- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.2 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | ஓட்டுனர் |
| பெயர் | - | செந்தில்குமார் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | ரத்தினசாமி | சமயம் | - | |
| கிராமம் | - | கக்கன்காலனி, வால்பாறை | வயது | - | 46/2025 |
| சாதி | - | | | | |

**09-10-2025**

**(1-ம் எதிரி ஆஜர்)**

**(2 முதல் 24 எதிரிகள் ஆஜரில்லை)**

(2 முதல் 24 எதிரிகள் தரப்பில் BNSS பிரிவு 355-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை:**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து லாரி ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மதனகோபால் எனக்கு தெரியும். நான் அவரது காரின் ஓட்டுனர் ஆவேன். அவர் டீ எஸ்டேட் உரிமையாளர் ஆவார். ஆஜர் 1-ம் எதிரியை தெரியும். வழக்கின் மற்ற எதிரிகளை தெரியும். அவர்கள் குரங்குமுடி கேசிஆர் எஸ்டேட்டில் வேலை செய்பவர்கள் ஆவார்கள். கடந்த 2022-ம் ஆண்டு தேதி மாதம் நினைவில் இல்லை. ஒரு நாள் காலை நான் எப்போதும் போல் கேசிஆர் எஸ்டேட்டிற்கு வேலைக்கு சென்றேன். அப்போது 08.30 மணியளவில் மதனகோபால் வீட்டு வாசலில் கூட்டமாக இருந்தது. அப்போது என்ன நடந்தது என்று தெரியவில்லை. நான் என் உரிமையாளருக்கு சிகரெட் வாங்கிசென்றேன். அப்போது வீட்டின் முன் கதவு பூட்டி இருந்தது. நான் வீட்டின் பின்புறம் வழியாக சென்று அ.சா.1 னிடம் சிகரெட் கொடுத்தேன். அப்போது அ.சா.1 தபால் ஒன்றை என்னிடம் கொடுத்தார். அதனை வால்பாறை காவல் நிலையத்தில் கொடுக்கும்மாறு கூறினார். அ.சா.1 என்னிடம் ஒரு வெற்று தாளில் கையொப்பம் பெற்றார். நான் காவல் நிலையம் சென்று அ.சா.1 கொடுத்த தபாலை கொடுத்துவிட்டேன். பின்னர் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. அன்றிலிருந்து நான் வேலைக்கு செல்லவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

கே.ஜி.ஆர் எஸ்டேட்டின் உரிமையாளர் மதனகோபாலுக்கும் அவரது மனைவிக்கும் மனவேற்றுமை மற்றும் கருத்து வேற்றுமை இருந்ததால் விவாகரத்து செய்ய நீதிமன்றத்தில் வழக்கு போட்டுள்ளார் என்று கேள்விப்பட்டேன் என்றால் சரிதான். இதற்குகிடையில் மதனகோபால் மனைவி கே.ஜி.ஆர் எஸ்டேட்டில் தனக்கு பங்கு உண்டு என்று நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.1 னின் மனைவி எஸ்டேட் தொழிலாளர்களை தன்பக்கம் சேர்த்துக்கொண்டு அ.சா.1 னிடம் வேலை செய்யவிடாமல் தடுத்துவந்தார் என்று சொன்னால் சரியல்ல. அதனால் அ.சா.1 தொழிலாளர்களுக்கு வேலைக்கு வராமல் இருந்ததற்கு காரணம் காட்டக்கோரி அறிவிப்பு

கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். அதனை உடனடியாக வாங்காமல் 11-01-2024-ம் தேதி நோட்டீஸ் பெற்றுக்கொண்டு தொழிலாளர்கள் பதில் அனுப்பினார்கள் என்றுசொன்னால் சரியல்ல. இந்நிலையில் 27-01-2022-ம் தேதி காலை சுமார் 08.00 மணிக்கு தனது எஸ்டேட் அலுவலகத்தில் அ.சா.1 இருந்தபோது மருந்து அடிக்கும் மிசின்களை காணவில்லை என்று சொல்லிவிட்டு சாப்பிட்டுகொண்டிருந்தபோது மதனகோபாலின்மனைவி பிரவீனாவுடன் வழக்கில் மற்ற 21 எதிரிகள் அ.சா.1 னின் வீட்டின் காமோண்டுக்குள் வந்து அத்துமீறி நுழைந்தும், ஜெயா மற்றும் தேவி ஆகியோர் அ.சா.1 னை பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டி நீ எப்படிடா எங்களுக்கு சோக்காஸ் நோட்டீஸ் கொடுக்கலாம் என்றும் உனக்கும் இந்த எஸ்டேட்டிற்கும் என்னடா சம்பந்தம் என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டி உன்னை தான் அம்மா எங்கள் எஸ்டேட்டிற்கு வரக்கூடாது என்று சொல்லியும் நீ ஏன் வருர என்று சத்தம் போட்டுக்கொண்டே ஜெயா என்பவர் அ.சா.1 னைப்பார்த்து உன்னை இங்கேயே அடித்துக்கொன்றால் தான் சரியாக வரும் என்று கத்திக்கொண்டு மதனகோபால் மீது காறிதுப்பி தன் கையால் அ.சா.1 னின் நெஞ்சில் குத்தினார் என்று சொன்னால் சரியல்ல. அங்கிருந்து அ.சா.1 சென்றுவிடாலாம் என்று காரில் ஏறியபோது எதிரிகள் வண்டியை நகரவிடாமல் அவரை தடுத்து நிறுத்திவிட்டார்கள் என்றுசொன்னால் சரியல்ல. கூட்டத்தில் இருந்து ஆண்கள் கையில் தடி, கவாத்து கத்தி போன்ற ஆயுதங்களை பின்புறம் மறைத்துவைத்திருந்ததோடு அவர்கள் இவனை இன்னைக்கு விடக்கூடாது அடித்துக்கொல்லுங்கள் என்று சத்தம்போட்டுக்கொண்டு அ.சா.1 றை நோக்கி வந்தபோது அவர் பயந்து வீட்டிற்குள் சென்று கதவை சாத்திக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. 1-ம் எதிரி சில பெண்களை கூப்பிட்டுக்கொண்டு அ.சா.1 அந்த பெண்களை கையை பிடித்து இழுத்ததாக போய் போலீசில் புகார் கொடுங்கள் என்றும் அ.சா.1 என்பவரின் மகன் தனுஷ்கிருஷ்ணனை பார்த்து இவன் மிசினை திருட்டிவிட்டான் என்றும் போலீசில் புகார் கொடுத்து இவனை உள்ளே அனுப்பினால்தான் செயல்பட்டு வருவான் என்று வால்பாறைக்கு அனுப்பிவைத்தார் என்று சொன்னால் சரியல்ல. 1-ம் எதிரி எங்கள் மீது போட்ட கேஸை வாபஸ் வாங்கினால்தான் உன்னை இங்கிருந்து அனுப்வோம் என்று கூறி அ.சா.1 னின் மனைவியும் மற்ற எதிரிகளும் அ.சா.1 னை வீட்டில் இருந்து வெளியே விடாமல் செய்தனர் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் வால்பாறை போலீசாருக்கு தகவல் தெரிவித்து 27-01-2022-ம் தேதி பகல் சுமார் 11.30 மணிக்கு போலீசார் சம்பவயிடத்திற்கு வந்து பிரச்சனையை தீர்க்க பேசியபோது எதிரிகளும் தனுஷ்கிருஷ்ணனும் சேர்ந்து போலீசாரிடம் வாக்குவாதம் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. 28-01-2022-ம் தேதி அதிகாலை சுமார் 01.30 மணிக்கு வால்பாறை DSP தணிமையிலும் போலீசாரும், வட்டாட்சியர், VAO மற்றும் வனத்துறையை சேர்ந்தவர்களும் சம்பவயிடத்திற்கு வந்து மேற்படி பிரச்சனை சம்பந்தமாக எதிரிகளிடம் பேசி அ.சா.1 னை மீட்டனர் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து எதிரிகளுக்கு ஆதரவாகவும் அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

அ.சா.1 மதனகோபால் கே.ஜி.ஆர் எஸ்டேட்டை சரியாக பராமரிப்பு செய்யாததால் அந்த எஸ்டேட் நஷ்டத்தில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு அ.சா.1 சம்பளம் முறையாக கொடுத்தாரா என்றால் 1 மாதம் கொடுப்பார். 1 மாதம் சம்பளம் கொடுக்காமல் இருப்பார். அந்த எஸ்டேட்டில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு சம்பளம் முறையாக கொடுத்துள்ளாரா என்றால் அது பற்றி தெரியாது. அ.சா.1 க்கு குடிபழக்கம் உள்ளது என்றால் சரிதான். அதனால் அவருக்க

கல்லீரல் நோய் உண்டு அறுவை சிகிச்சை செய்யவேண்டிய சூழ்நிலை உள்ளது என்றால் மருத்துவமனை அழைத்து சென்றார்கள் மற்ற விவரங்கள் எனக்கு தெரியாது. அ.சா.1 னின் வீட்டு முன்பு நின்றிருந்தவர்கள் எதற்காக அங்கு இருந்தார்கள் என்று அது எனக்கு தெரியாது. அந்த சமயத்தில் அ.சா.1 மனைவியான 1-ம் எதிரியும், மகனான 2-ம் எதிரியும் அங்கு இருந்தார்களா என்றால் நான் பார்க்கவில்லை. நான் அங்கிருந்து அ.சா.1 கொடுத்த பேப்பரை வாங்கிக்கொண்டு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் அ.சா.1 கொடுத்த தாளை போலீசாரிடம் கொடுக்கும்போது விசாரித்தார்கள் அதன் பின்பு என்னை விசாரிக்கவில்லை.

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**CC.No.19/2022**

**2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 09- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 3-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | தனியார் பள்ளி மேற்பார்வையாளர் |
| பெயர் | - | வினோத்குமார் | வட்டம் | - | சென்னை |
| த/பெ | - | தேவராஜ் | சமயம் | - | |
| கிராமம் | - | ST Thomas Mount | வயது | - | 44/2025 |
| சாதி | - | | | | |

**(1-ம் எதிரி ஆஜர்)**
**(2 முதல் 24 எதிரிகள் ஆஜரில்லை)**

(2 முதல் 24 எதிரிகள் தரப்பில் BNSS பிரிவு 355-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை:**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து சென்னை முகலிவாக்கத்தில் உள்ள தனியார் பள்ளியில் மேற்பார்வையாளராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மதனகோபால் என்பவரை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். வழக்கின் மற்ற எதிரிகளை தெரியும். கடந்த 22-01-2022-ம் தேதி சம்பவதேதிக்கு ஒரு மாதத்திற்கு முன்பு வால்பாறை குரங்குமுடியில் கே.ஜி.ஆர் எஸ்டேட்டில் வேலைக்கு சேர்ந்தேன். அன்றைய தினம் மதனகோபால் மற்றும் பிரவீனா ஆகியோர்களுக்கு கிடையே குடும்ப பிரச்சனை இருந்தது. மற்றபடி அவர்களுக்குள் ஏற்பட்ட சண்டை பற்றி எனக்கு தெரியாது. நான் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

கே.ஜி.ஆர் எஸ்டேட்டின் உரிமையாளர் மதனகோபாலுக்கும் அவரது மனைவிக்கும் மனவேற்றுமை மற்றும் கருத்து வேற்றுமை இருந்ததால் விவாகரத்து செய்ய நீதிமன்றத்தில் வழக்கு போட்டுள்ளார் என்று கேள்விப்பட்டேன் என்றால் சரிதான். இதற்குகிடையில் மதனகோபால் மனைவி கே.ஜி.ஆர் எஸ்டேட்டில் தனக்கு பங்கு உண்டு என்று நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.1 னின் மனைவி எஸ்டேட் தொழிலாளர்களை தன்பக்கம் சேர்த்துக்கொண்டு அ.சா.1 னிடம் வேலை செய்யவிடாமல் தடுத்துவந்தார் என்று சொன்னால் சரியல்ல. அதனால் அ.சா.1 தொழிலாளர்களுக்கு வேலைக்கு வராமல் இருந்ததற்கு காரணம் காட்டக்கோரி அறிவிப்பு கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். அதனை உடனடியாக வாங்காமல் 11-01-2024-ம் தேதி நோட்டீஸ் பெற்றுக்கொண்டு தொழிலாளர்கள் பதில் அனுப்பினார்கள் என்றுசொன்னால் சரியல்ல.

இந்நிலையில் 27-01-2022-ம் தேதி காலை சுமார் 08.00 மணிக்கு தனது எஸ்டேட் அலுவலகத்தில் அ.சா.1 இருந்தபோது மருந்து அடிக்கும் மிசின்களை காணவில்லை என்று சொல்லிவிட்டு சாப்பிட்டுகொண்டிருந்தபோது மதனகோபாலின்மனைவி பிரவீனாவுடன் வழக்கில் மற்ற 21 எதிரிகள் அ.சா.1 னின் வீட்டின் காமோண்டுக்குள் வந்து அத்துமீறி நுழைந்தும், ஜெயா மற்றும் தேவி ஆகியோர் அ.சா.1 னை பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டி நீ எப்படிடா எங்களுக்கு சோக்காஸ் நோட்டீஸ் கொடுக்கலாம் என்றும் உனக்கும் இந்த எஸ்டேட்டிற்கும் என்னடா சம்பந்தம் என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டி உன்னை தான் அம்மா எங்கள் எஸ்டேட்டிற்கு வரக்கூடாது என்று சொல்லியும் நீ ஏன் வருர என்று சத்தம் போட்டுக்கொண்டே ஜெயா என்பவர் அ.சா.1 னைப்பார்த்து உன்னை இங்கேயே அடித்துக்கொன்றால் தான் சரியாக வரும் என்று கத்திக்கொண்டு மதனகோபால் மீது காறிதுப்பி தன் கையால் அ.சா.1 னின் நெஞ்சில் குத்தினார் என்று சொன்னால் சரியல்ல. அங்கிருந்து அ.சா.1 சென்றுவிடாலாம் என்று காரில் ஏறியபோது எதிரிகள் வண்டியை நகரவிடாமல் அவரை தடுத்து நிறுத்திவிட்டார்கள் என்றுசொன்னால் சரியல்ல. கூட்டத்தில் இருந்து ஆண்கள் கையில் தடி, கவாத்து கத்தி போன்ற ஆயுதங்களை பின்புறம் மறைத்துவைத்திருந்தோடு அவர்கள் இவனை இன்னைக்கு விடக்கூடாது அடித்துக்கொல்லுங்கள் என்று சத்தம்போட்டுக்கொண்டு அ.சா.1 றை நோக்கி வந்தபோது அவர் பயந்து வீட்டிற்குள் சென்று கதவை சாத்திக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. 1-ம் எதிரி சில பெண்களை கூப்பிட்டுக்கொண்டு அ.சா.1 அந்த பெண்களை கையை பிடித்து இழுத்ததாக போய் போலீசில் புகார் கொடுங்கள் என்றும் அ.சா.1 என்பவரின் மகன் தனுஷ்கிருஷ்ணனை பார்த்து இவன் மிசினை திருட்டிவிட்டான் என்றும் போலீசில் புகார் கொடுத்து இவனை உள்ளே அனுப்பினால்தான் செயல்பட்டு வருவான் என்று வால்பாறைக்கு அனுப்பிவைத்தார் என்று சொன்னால் சரியல்ல. 1-ம் எதிரி எங்கள் மீது போட்ட கேஸை வாபஸ் வாங்கினால்தான் உன்னை இங்கிருந்து அனுப்வோம் என்று கூறி அ.சா.1 னின் மனைவியும் மற்ற எதிரிகளும் அ.சா.1 னை வீட்டில் இருந்து வெளியே விடாமல் செய்தனர் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் வால்பாறை போலீசாருக்கு தகவல் தெரிவித்து 27-01-2022-ம் தேதி பகல் சுமார் 11.30 மணிக்கு போலீசார் சம்பவயிடத்திற்கு வந்து பிரச்சனையை தீர்க்க பேசியபோது எதிரிகளும் தனுஷ்கிருஷ்ணனும் சேர்ந்து போலீசாரிடம் வாக்குவாதம் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சம்பவம் தொடர்பாக அ.சா.1 அவரது ஓட்டுனர் செந்தில்குமார் மூலம் ஒருபுகாரை வால்பாறை காவல் நிலையத்தில் கொடுத்து நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுப்பிவைத்தார் என்றுசொன்னால் சரியல்ல. 28-01-2022-ம் தேதி அதிகாலை சுமார் 01.30 மணிக்கு வால்பாறை DSP தணிமையிலும் போலீசாரும், வட்டாட்சியர், VAO மற்றும் வனத்துறையை சேர்ந்தவர்களும் சம்பவயிடத்திற்கு வந்து மேற்படி பிரச்சனை சம்பந்தமாக எதிரிகளிடம் பேசி அ.சா.1 னை மீட்டனர் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து எதிரிகளுக்கு ஆதரவாகவும் அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் கேஜிஆர் எஸ்டேட்டில் வேலை செய்ததற்கு சம்பளம் கொடுத்தார்களா என்றால் இது வரை கொடுக்கவில்லை. சம்பவயிடத்தில் அ.சா.1 ம் எதிரியை நான் பார்த்தேனா என்றால் இல்லை. அந்த எஸ்டேட்டில் இருந்த தொழிலாளர்களுக்கு கொடுக்கவேண்டிய சம்பள பாக்கி இருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அ.சா.1 க்கு குடிப்பழக்கம் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால்

தெரியும். கேஜிஆர் எஸ்டேட் நஷ்டத்தில் இயங்குவது எனக்கு தெரியும் என்றால் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் அன்றைய தினம் இரவு வந்து விசாரித்தார்கள் அதன்பின் என்னை விசாரிக்கவில்லை.

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.19/2022**

**2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 09- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 4-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | ஓட்டுனர் |
| பெயர் | - | பொன்னர் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | சுப்பிரமணி | சமயம் | - | |
| கிராமம் | - | பாரதிதாசன் நகர் குரங்குமுடி | வயது | - | 33/2025 |
| சாதி | - | | | | |

**<u>09-10-2025</u>**

**(1-ம் எதிரி ஆஜர்)**
**(2 முதல் 24 எதிரிகள் ஆஜரில்லை)**

(2 முதல் 24 எதிரிகள் தரப்பில் BNSS பிரிவு 355-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து லோடு வண்டி ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மதனகோபால் எனக்கு தெரியும். ஆஜர் 2-ம் எதிரி எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உ ள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(பார்வைமகஜரில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆககுறியீடு செய்யப்படுகிறது)** கடந்த 2022-ம் ஆண்டு தேதி மாதம்நினைவில் இல்லை. போலீசார் என்னிடம் கேஜிஆர் எஸ்டேட்டில் வைத்து கையொப்பம் வாங்கினார்கள் எதற்காக வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

கடந்த 12-04-2022-ம் தேதி காலை 07.00 மணிக்கு வால்பாறை காவல் நிலைய போலீசார் குற்ற எண் 93/2022 வழக்கு தொடர்பாக கேஜிஆர் எஸ்டேட்டிற்கு வந்தார்கள் என்றுசொன்னால் சரியல்ல. அப்போது போலீசார் என்முன்பாகவும், ஜெயக்குமார் என்பவர் முன்பாகவும், சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம்தயார் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் நானும், ஜெயக்குமார் என்பவரும் பார்வை மகஜரில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

அ.சா.1 க்கும் அவரது மனைவியான 1-ம் எதிரிக்கும் குடும்ப பிரச்சனை இருப்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். அ.சா.1 க்கு குடிப்பழக்கம் உள்ளது என்றால் சரிதான். போலீசார் கேட்டுக்கொண்டதற்காக பார்வை மகஜரில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான், நான் கையொப்பம் செய்த தாளை நான் படித்துப்பார்த்தேனா என்றால் வெற்றுதாளில் தான் கையொப்பம் வாங்கினார்கள்.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.